Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 181/2024 PW-7**

Name : மருத்துவர் மோனிஷா
Father / Husband name : ஷேஷவர்மா
Village : மதுராந்தகம்
Age : 34
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 17.04.2026

Accused present. Defence counsel present. Witness identified by HC 2735 Palanivel.

**முதல் விசாரணை**

நான் தற்போது மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியிலிருக்கிறேன். கடந்த 14.11.2023 அன்று திண்டிவனம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியிலிருந்தபோது மாலை 04.30 மணிக்கு பாஸ்கரன் என்பவரை அவருடன் பணிபுரியும் கண்ணன் என்பவர் மருத்துவமனைக்கு அழைத்துவந்தார். அன்றையதினமே மாலை 4 மணிக்கு கொள்ளார் அடையாளம் தெரியாத ஒருநபர் கையால் தாக்கியதாக கூறினார். நான் பாஸ்கரனை பரிசோதனை செய்தபோது அவருக்கு வலது கன்னத்தில் கன்றியக்காயம் இருந்தது. அவருக்கு புறநோயாளியாக சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்டக்காயம் சொற்பகாயம் என்று சான்று வழங்கினேன். **அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காயம்பட்ட நபர் சொன்ன விதத்தில் தாக்கப்பட்டிருந்தால் மேற்படிக்காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எந்த போலிசார் என்னை விசாரித்தார் என்றால் பிப்ரவரி மாதம் 2024. எந்த கன்னத்தில் அடிப்பட்டது என்று விபத்து பதிவேட்டில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, வலது கன்னம் என்று சொல்லியுள்ளேன். ஒருவர் வண்டியில் கீழே

விழுந்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். காயத்தின் வயது, தன்மை, நிறம் குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கன்னத்தில் வீக்கம் இருந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் கன்றியக்காயம் இருந்ததாக சொல்லியுள்ளேன். ஒருவர் தொடர்ந்து தூக்கம் இல்லாமல் பணியிலிருந்தால் மேற்படிக்காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் இல்லை. காயம்பட்ட நபர் எத்தனை மணிக்கு சிகிச்சைக்கு வந்தார் என்றால் 04.30 மணிக்கு வந்தார்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.